தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 22-3-58 | சனிக்கிழமை | இதழ் 36

இவர்களின் கொடுமை!

அரசாங்கத்திற்கும் மனித சமுதாயத்திற்கும் ஒப்பந்தமான காலத்திலிருந்து பொதுமக்கள் பாதுகாப்புத் துறையின்மீது நம்பிக்கை வைத்து வருகிறார்கள். உலகின் பொருள்கள், உயிரினங்கள், இயற்கை வளம் அனைத்தும் அரசாங்கத்துக்கே சொந்தம் என்ற உடன்படிக்கையில் நமது மூதாதையர் கையொப்பம் இடும்பொழுது இரு சாராருக்கும் இடையிலே சண்டை சச்சரவுகள் நிகழாதிருக்கும்படி பாதுகாக்க நிறுவிய பாதுகாப்புத்துறையை நம்பித்தான் கையொப்பமிட்டார்கள். ஊதியம் கொடுப்போருக்கே பணிந்து நடப்பது என்ற 'வேலைக்கார விசுவாசம்' பாதுகாப்புத்துறைக்கு வேண்டாத-கூடாத பழக்கம் என்றே அன்றைய மன்னர் ஆட்சி அறிவுறுத்தி வந்தது; பறையடித்துப்பிரகடனப்படுத்தியது. அமைதி காக்கவேண்டியது; அடங்காதவர்களை அடங்கச் செய்யவேண்டியது: உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டிக்க வேண்டியது – இவை பாதுகாப்புத் துறையின் முக்கிய அலுவல்கள். இப்போதிருக்கிற போலீஸ் இலாகாவின் பணிகள்கூட, இவையும் இவைகளுக்குள்ளடங்கிய பல பிரிவுகளும் தான்.

போலீஸ் இலாகா நீதிக்குக் கட்டுப்பட்டது. தராசு முள்ளைப்போல் நின்று பணிபுரிய வேண்டியது. நாட்டவரில் நல்லவர்களுக்குத் துணையாக இருந்து காரியமாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு போலீஸ் இலாகாவையே சார்ந்ததாகும். ஆனால் இவ்வளவு நம்பிக்கைக்குப் பாத்திரமான போலீஸ் இலாகா தமிழகத்தில் எந்த நிலையில் இருக்கிறது? யாருக்குப் பொல்லாதவர்களாக நடந்துகொள்ள வேண்டுமோ அவர்களுக்கு உதவியாளர்களாகவும், யாருக்குப் பணிபுரியக் கடமைப்பட்டவர்களோ அவர்களுக்குப் பயங்கரவாதிகளாகவும் இன்றையத் தமிழ்நாட்டுப் போலீஸ் இலாகா தோற்றமளித்து வருகிறது. நாள் தோறும் தினசரிப் பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் பார்க்கும்போது உள்ளம் கொதிக்கிறது.

"குடிசைக்குள் புகுந்து இளம் பெண்ணைக் கற்பழிக்க முயன்றார் போலீஸ்காரர்."

"குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி போலீஸ்காரர் என்னைத் துன்புறுத்தினார்"—ஒரு கைதி.

"உன் மனைவியை என்னோடு அனுப்பு என்று அந்தப் போலீஸ்காரர் சொன்னார்"—விசாரணைக் கைதி.

—இப்படிப்பட்ட செய்திகள் அடிக்கடி பத்திரிகைகளில் வெளியாகின்றன. போலீஸ் என்றால் பொதுமக்களுக்கு ஒரு பய உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தண்டிக்கப்பட்ட கைதிகள்கூட இன்னொரு வழக்கிற்குச் சாட்சி சொல்ல வர மறுக்கிறார்கள். "முதலில் என்னை விடுதலை செய்யுங்கள்; பிறகு உள்ளது உள்ளபடி சொல்கிறேன்" என்று ஒரு சாட்சி மாஜிஸ்ட்ரேட் அவர்களிடம் கூறியதாக இந்த வாரம் ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது. ஒரு வழக்கில் குற்றவாளியைக் கண்டுபிடிக்க சாட்சிகளின் கூற்றுக்கள் மிகவும் அவசியம். அப்படிப்பட்ட வழக்குகளின் முக்கியமான சாட்சிகள், போலீசாருக்குப் பயந்து வர மறுக்கிறார்கள்; பாதுகாப்புத் துறையின் போக்கு இந்த முறையில் இயங்கி வந்தால் குற்றவாளியைக் கண்டுபிடித்து நீதியை நிலை நாட்டுவது எங்ஙனம் இயலும்?

சென்னையில் நடந்துவரும் முக்கியமான வழக்கு ஒன்றில் சாட்சி சொல்லுவதற்காக சிறையிலிருந்து அழைத்து வரப்பட்ட கைதிகள் இரண்டு பேர் தாங்கள் எந்த விதமான குற்றமும் செய்யாமல் தண்டிக்கப்பட்டவர்கள் என்றும் காரணமில்லாமல் போலீசாரால் தாக்கப்பட்டவர்கள் என்றும் பகிரங்கமாகக் கோர்ட்டில் கூறியிருக்கிறார்கள். இது பற்றிய விபரங்கள் அனைத்தும் பத்திரிகைகளில் வெளியாகி இருக்கின்றன. இதைப்போல் நாகர்கோயிலில் ஒரு இளம்பெண்ணை போலீசார் தகாத முறையில் தாக்கியதாக ஒரு வழக்கும் அதன் தீர்ப்பும் வெளியாகியிருக்கிறது. குறிப்பிட்ட ஒரு காலக்கட்டத்திற்குப் பிறகு திடீரென்று இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுகின்றன என்று கூறுவதற்கில்லை. நம்பிக்கையின் பேரில் மேலிடத்தார் கவனிப்பில்லாதிருந்ததால்தான் இதுபோன்ற கெட்ட செயல்கள் நடைபெறுகின்றன என்று நினைப்பதற்கு வேண்டுமானால் வழியிருக்கிறது.

இதுபற்றிக்கூட சென்னை சட்டமன்றத்தில் பிரச்சினை கிளம்பியிருக்கிறது. எதிர்க்கட்சிக்காரர்கள் அனைவரும் போலீஸ் இலாகாவின் ஒரு தலைப்பட்சமான போக்கை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள், ஆளுங்கட்சிக்கே பாதுகாப்புத்துறை ஆதரவாக இருக்கக்கூடாது என்று எடுத்துக்காட்டியிருக்கிறார்.

வெள்ளைக்காரர்கள் நாட்டை ஆண்ட காலத்தில், போலீஸ்காரர்களைப் பேய் மனிதர்கள் என்று காங்கிரஸ்காரர்கள் அழைத்து வந்தார்கள். இரக்கமில்லாதவர்கள் என்று பொதுமேடைகளில்கண்டித்தார்கள். அப்பொழுதாவது, போலீஸ்காரர்கள் அவ்வாறு கருதப்படுவதற்கு நியாயமிருந்தது. வெள்ளையன் அந்நியன், ஒருவேளை போலீஸ் படையை ஏவி விட்டிருப்பான் என்று கருத இடமிருந்தது. ஆனால் இப்போது 'காந்தி' சர்க்கார் அல்லவா நாட்டை ஆளுகிறது! போலீஸ்காரர்கள் மரியாதை வாரம் கொண்டாடினார்கள். பத்திரிகைகளிலெல்லாம் அவர்களின் சேவையைப் பற்றியும், பொதுமக்களிடம் அவர்கள் நடந்துகொள்ளும் கண்ணியத்தைப்பற்றியும் மேலதிகாரிகளின் படங்களோடு செய்திகள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. எதற்காக அந்த விழா கொண்டாடப்பட்டது? மக்கள் மனதில் போலீஸ் இலாகா ஒரு புதிய இடத்தை, புதிய வடிவில் பெறுவதற்குத் தானேயன்றி சம்பிரதாயத்திற்கல்ல என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். பதவி உயர்வும், மேலிடத்தாரின் குளிர்ந்த பார்வையும் பொதுமக்களின் நல்லெண்ணத்தால்கூட கிடைக்க வழி உண்டு. நாட்டிலே இருக்கிறவர்களையெல்லாம் கூண்டுக்குள் அடைத்துவிட்டு யாருக்காகப் பதவி உயர்வு பெற வேண்டும்? குறிப்பிட்ட காலத்திற்குள் இத்தனை குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நிபந்தனை சட்டத்தில் காணப்பட்டால் அந்தச் சட்டத்தின் பேரிலேதான் குற்றமே தவிர நிரபராதிகள் அதற்குப் பொறுப்பாளிகளாக முடியுமா? சட்டமன்றத்தில் போலீஸ் அமைச்சர் எல்லாவற்றையும் கவனிப்போம் என்றுகூறியிருக்கிறார். அதுவும், 'காங்கிரஸ் ஒன்றினால்தான் பொதுமக்களுக்கு நன்மை செய்ய முடியும்' என்று மேடை தோறும் 'காலட்சேபம்' நடத்திவரும் பக்தவத்சலம் சொல்லியிருக்கிறார். பொதுமக்கள் அவருடைய சொல்லுறுதியை எடை போடும் காலம் வந்திருக்கிறது. இருதயமுள்ளவர்கள் அனைவரும்போலீஸ் அமைச்சரின் நடவடிக்கையை ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறார்கள். ★

மனிதருள் நல்மரங்கள் !



மூதுரை விளக்கம்

முருகசுப்பிரமணியன்

மரங்களிலே நல்ல மரம் எது?

தச்சு வேலைக்காரர்களைக் கேட்டால் தேக்குமரத்தைச் சொல்வார்கள். தேக்குமரத்தில் கட்டிலும், அலமாரியும் செய்துவைத்தால் அவை நாட்பட உழைக்கும். வைரம் பாய்ந்த மரங்களே மரவேலைக்குத் தகுந்தவை.

மருத்துவரோ வேப்பமரம் மிகப் பயனுடையது, அதுதான் நல்ல மரம் என்பார். வேம்பின்பூவை ரசம் வைத்துச் சாப்பிடலாம். வேப்பங் கொழுந்து நல்ல மருந்து. வேப்பெண்ணெய் தேய்த்துக் குளிப்பது உடலை உறுதியாக்கும்; நோய் அண்டாது. வேம்பு தருகிற காற்றின் சுகம் எல்லோருமே அறிந்தது.

ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்பது பழமொழி. ஆலமரம் நிழல் தருவதில் தலைசிறந்து விளங்குகிறது. மன்னர் தம் பட்டம் பரிவாரங்களோடு தங்கப் பந்தல் போன்று நிழல் தருவது ஆல். சாலைகளில் நிற்கும் ஆலமரங்கள் கண்ணுக்குப் கருத்துக்கும் அழகு பயப்பவை.

தென்னைமரம் மனிதனுக்குத் தன்னையே தந்து நன்றியின் உறைவிடமாக விளங்குவதை நாம் மூதுரைமூலம் முன்பு தெரிந்து கொண்டோம்.

நாட்டிலே வளர்ந்தோங்கும் மரங்களைத் தவிர்த்துக் காட்டிலே வளம் பெருக்கும் மரங்களும் பல உண்டு. அடர்ந்த காடு நாட்டுக்கு அரிய செல்வம். மலாயாவில் காட்டுச் செல்வம் நிறைந்திருக்கிறது.

காடுகளை அழிக்கக் கூடாதென்று அரசாங்கங்கள் இயக்கம் நடத்துகின்றன. காடுகளைப் பாதுகாக்கத் தனி ஆட்சித்துறை இருக்கிறது. மரங்களை வெட்டுவது குற்றம். அதற்குத் தண்டனை உண்டு. காடு அடர்த்தியாயிருப்பது மழை பருவப்படி பெய்ய இன்றியமையாததாகும்.

மரம் நடும் திருவிழாக்களைச் சில நாடுகளில் நடத்துகிறார்கள். மந்திரிகளும் தலைவர்களும் மரம் நடுவார்கள். நாடெங்கும் கோடிக்கணக்கான மரங்கள் நடப்படும்.

மரத்திற்கு இவ்வளவு மதிப்பு தரப்படுகிறது ! மரங்களின் பயனை உணர்ந்து மனிதர்கள் அதனைப் பேணி வருகிறார்கள்.

ஔவையார், காட்டிலும் நாட்டிலும் வளரும் மரங்களை எல்லாம் பார்த்தார். அவருக்கு ஓர் ஐயப்பாடு எழுந்தது. காட்டிலும் நாட்டிலும் வளரும் மரங்களெல்லாம் உண்மையில் மரங்களா என்று அவர் தமக்குத் தாமே சிந்தித்தார். 'அவை மரங்கள் அல்ல' என்ற முடிவுக்கு வந்தார்.

அப்படி முடிவுக்கு வந்த அவர் 'எது நல்ல மரம்?' என்றும் நமக்குச் சொல்கிறார்.

மூதுரையில் இது ஓர் அருமையான பாட்டு. படித்துப் படித்துச் சிரிக்கலாம். படித்துப் படித்துப் பயனடையலாம். படித்துப் படித்துச் சுவையும் காணலாம். ஆயிரம் தடவை படித்தாலும் தெவிட்டாது. அவ்வளவு சுவையான பாட்டு.

கவையாகிக் கொம்பாகிக்
காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் —
சபை நடுவே
நீட்டோலை வாசியா
நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன் நல்மரம்.

கிளையும் கொம்பும் விரித்துக் காட்டிலே வரிசை வரிசையாக நிற்கின்றனவே, அவற்றைத்தானே நல்ல மரங்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் ! அது தவறு. நல்ல மரம் எது தெரியுமா?

கற்றவர்களின் சபையிலே தன்னிடம் நீட்டிய ஓலையைப் படிக்க முடியாமல் திருதிருவென்று விழித்துக்கொண்டு நிற்கிறானே அவனே நல்ல மரம் ! அருமையான மரம் ! காட்டிலே வளர்ந்திருக்கும் மரமெல்லாம் அவனிடம் பிச்சை வாங்க வேண்டும் !

ஔவையார் சொல்கின்றகருத்து இதுதான்; காட்டிலே நிற்பவை மரங்களல்ல; சபையிலே நீட்டிய ஓலையைப் படிக்க இயலாமல் நிற்கிறானே அவனே நல்ல மரம் என்கிறார் அவர்.

மரத்திற்கும் மனிதனுக்கும்உள்ள வேறுபாடுகள் யாவை? ஆசிரியர் இப்படி ஒரு கேள்வி கேட்டால் நீங்கள் என்ன விடை தருவீர்கள்?

மனிதன் ஆடுவான் ஓடுவான்–மரம் இருந்த இடத்திலேயே இருக்கும். யாராவது பெயர்த்து வைத்தால்தான் நகரும். மனிதன் பேசுவான். மரம் ஊமை. மனிதனுக்குக் காது கேட்கும். மரம் செவிடு. மனிதன் கண்ணால் பார்ப்பான். மரத்திற்குக் கண்ணில்லை. வளர்ப்பானேன்? மரத்திற்கு ஓர் அறிவே உண்டு. மனிதன் ஆறறிவு படைத்தவன்.

'அரிது அரிது மானிடர் ஆதல் அரிது' என்பார்கள். மனிதப் பிறவி அவ்வளவு உயர்ந்த பிறவி. அவ்வளவு உயர்ந்த மனிதனைக்கேவலம் உயிர்களின் கடைசி வரிசையில் நிற்கும் மரத்தோடு சேர்த்துவிடுகிறார் ஔவையார் ! எல்லா மனிதர்களையும் அன்று; படிக்கத் தெரியாதவனையே, எழுத்து வாசனை அற்றவனையே மரம் என்று நயமாகச் சாடுகிறார் நம் தமிழ்ப் பாட்டி.

கல்வியின் அருமையை இதனை விட அழகாக வற்புறுத்த முடியாது. படிக்காதவர்களுக்கு இதனைவிட உறைக்கும்படி சாட்டை கொடுக்க இயலாது. கல்வியைப் புறக்கணிப்பவர்களுக்குச் சரியான சூடு. மூதுரையில் இந்தப் பாட்டைப் படிக்கும் யாரும் கல்வியை இகழத் துணியமாட்டார்கள்.

'பைத்தியக்காரர்களே ! காட்டிலும் சாலையிலும் பூங்காவிலும் நல்ல மரம் இருக்கிறதாவென்று தேடியலையாதீர்கள். அந்த மரம் வேறு எங்கும் இல்லை. நம்மிடையே தான் இருக்கிறது. மனித உருவில் தான் இருக்கிறது. கண்ணும், காதும், மூக்கும், முகமும், கையும், காலும் கொண்டு நம்மோடுதான் அது நடமாடுகிறது. அது படிக்காத மூடமரம் ! மனிதப் பிறவியெடுத்த நெடுமரம் !

எவ்வளவு அருமையான கேலி ! 'வசை'யை இவ்வளவு சுவையாக எந்தக் கவிஞரும் கையாண்டதில்லை !

இம்மூதுரைப் பாட்டு படிக்குந்தோறும் புது நயத்தைக் காட்டுகிறது. படிக்காத முட்டாளுக்குக் கற்றவர்களின் சபையில் என்ன வேலை? அங்கே சென்றது அவனுடைய முதல் அசட்டுத்தனம். குறிப்பறியமாட்டாதவன் என்று ஔவையார் சொல்வது இதனைத்தான். 'நமக்குச் சுட்டுப்போட்டாலும் எழுத்து வராது. அப்படியிருக்கப் படித்த புலவர்கள் அவையில் நாம் கால் வைக்கலாமா? அங்கே சென்றால் அந்த அவைக்குப் பொருத்தமாகப் புலவர்களோடு உரையாடவும் ஆராய்ச்சிகளைப் படிக்கவும் வேண்டுமே.' இவற்றை எண்ணிப்பாராது கற்றவர் சபைக்கு அவன் சென்றது முதல் குற்றம்.

அப்படித்தான் இடம் தெரியாமல் போய்விட்டான் – தன்னிடம் ஓலையை நீட்டிய பின்னராவது, ஓட்டம் பிடிக்கவேண்டாமா? அதனையும் அவன் செய்யவில்லை. அவன் நெடுமரமாக ஓலையைக் கையில் பிடித்தபடி நின்றான் – மரத்திற்கு ஓடும் ஆற்றலில்லை–அதனால் நின்றவிடத்திலேயே நிற்கிறது. இரண்டு காலைப் படைத்த இவன் ஏன் நின்று கொண்டிருக்கவேண்டும்?

குறிப்பறியும் திறமை இல்லை; பிறர் தன்னைக் கேவலமாகக் கருதுவரே என்று உணரும் ஆற்றல் இல்லை; அவமானத்தை புரிந்து கொள்ளாத அசடன் !

அவனை மரம் என்று சொல்லாமல், காட்டில் நிற்பவற்றை மரங்கள் என்பது எவ்வளவு அறியாமை !

மரத்திற்கு உணர்ச்சி இல்லை. மனிதனுக்கு உணர்ச்சி உண்டு. பிறர்படும் துயரைக்கண்டு மனிதன் அழுவான்; மரத்திற்கு அந்த ஆற்றல் இல்லை. மனிதன் மகிழ்ச்சி பிறந்தால் சிரிப்பான். மரத்தினால் சிரிக்கமுடியாது. சுற்றி நிகழும் காரியங்களை உணர்ந்து அவற்றுக்கேற்ப நடந்துகொள்ளத் தெரிந்தவன் மனிதன். அதுதான் குறிப்பறிதல் என்னும் பண்பு. சாவு வீட்டில் சிரிப்பதோ, மண வீட்டில் ஒப்பாரி வைப்பதோ அந்தப் பண்புக்குப் பொருந்தாது.

குறிப்பறியமாட்டாதவர்கள் — உலக இயற்கையை அறிந்து நடக்கத் தெரியாதவர்கள் — பிறருடைய கருத்தை அவர்கள் முகக் குறிப்பாலேயே அறிந்துகொள்ளமுடியாதவர்கள் மரங்களுக்குச் சமமானவர். அவர்கள் மனிதர்களாகப் பிறந்து விட்ட போதிலும் மரங்களே !

தான் இடும் வேலையைத் தன் பிள்ளை உடனே செய்யாவிட்டால் 'ஏனடா நெடுமரம்போல நிற்கிறாய்?' என்று தகப்பனார் கண்டிப்பதை நாம் கேட்டிருக்கிறோம். கொடுமை நடப்பதைப் பார்த்துக் கொண்டு கைகட்டி வெறுமனே நிற்பவர்களை 'நெடு மரம்போல் நின்றார்' என்று புலவர்கள் வன்மையாகச் சாடுகின்றனர்.

பாரதத்திலே வரும் காட்சி, 'பாஞ்சாலியைத் துரியோதனன் துயில் உரிகிறான். காணும் எவருக்கும் கொதிப்பு பிறக்கும். மானமுள்ள எவரும் துரியோதனன் மீது பாய்ந்து அவனைக் கண்டதுண்டமாக்கவே துணிவர். ஆனால் பாஞ்சாலியின் கணவர் தருமர் முதலானோர் வீரன் அர்ச்சுனன் உட்பட அந்தச் சபையிலே இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டு கைகட்டி நின்றார்கள். பாஞ்சாலியின் கணவர்கள் அவர்கள் ! 'நின்றார் நெடு மரம்போல்' என்று அவர்களைச் சுடுகிறார் பாரதியார் தம் காவியத்தில். அவர்களின் புலம்பலைப் பெட்டைப் புலம்பல் என்று இடித்துப் பேசுகிறார்.

மனிதன் செயல் திறம் அற்ற நிலையில் மரமாகிவிடுகிறான். அவனுக்கும் மரத்திற்கும் உள்ள வேறுபாடு நீங்கிவிடுகிறது.

மீண்டும் மூதுரைப் பாட்டைக் கவனிப்போம். 'நல் மரம்' என்ற சொல்லிலுள்ள நயத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். நீ உணர்ச்சியற்ற கட்டை' என்று ஒருவனைத் திட்டுவதைவிட 'அப்பா நீ அருமையான தேக்குமரக் கட்டை' என்று சொல்வது நயமான வசை.

கற்றவர் சபையிலே நீட்டிய ஓலையைப் படிக்கமுடியாமல் விழித்துக் கொண்டு நிற்கும் மடையனை 'நீ மரமடா' என்று திட்டுவதைக் காட்டிலும் 'அப்பா நீ நல்ல மரம்' என்று சொல்வது சாமர்த்தியமான முறை. இப்படிச் சூடு கொடுப்பது நன்கு உறைக்கும். உடனே பலனும் கிடைக்கும்.

துடைப்பத்திற்குப் பட்டுக்குஞ்சம் கட்டுவதுபோல ஔவையார் இவ் வஞ்சகப் புகழ்ச்சியைக் கையாண்டிருக்கிறார் !

குழந்தைகள் இனிமேல் இந்த முறையைத் தாங்களும் கையாளலாம். வகுப்பில் ஆசிரியர் கேள்வி கேட்கிறார். பதிலளிக்கமுடியாமல் நிற்கிற மாணக்கர்களை 'நீ நல்ல ஆலமரம்', 'நீ நல்ல வேப்பமரம்', 'நீ நல்ல தென்னை மரம்', என்று இனிக்கும் வார்த்தைகளால் கேலி செய்வது பொருத்தமாக இருக்கும் ! ஆனால் நீங்களும் பள்ளிக்குப் பாடம் படிக்காமல் வந்து, விடையளிக்கமுடியாமல் நெடு மரம்போல் நின்றால் உங்களையும் மற்ற மாணவர்கள் 'அப்பா பனைமரம்' என்று அழைப்பார்கள் என்பதை மறந்து விடாதீர்கள் !

மனிதப் பிறவி உயர்ந்தது; படிப்பு அதனை மேலும் உயர்ந்ததாக்குகிறது. மனிதனைப் பண்புள்ளவனாக்குகிறது.

படிக்காத மனிதன் உலகுக்குச் சுமை. அவன் நடமாடுகின்ற மரம். காட்டிலுள்ள மரங்களால் மனிதனுக்கு எத்தனையோ வழிகளில் பயன் உண்டு ! இந்த மனித மரத்தால் எந்தப் பயனும் இல்லை. ஆகவே காட்டில் இருப்பவை அல்ல நல்மரம் ! இந்த மடையனே நல்ல மரம் !

★

[மலாயா வானொலித் தமிழ்ப் பள்ளிக்கூடப் பகுதியில் 14-2-58ல் ஒலி பரப்பப்பட்டது.]

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 4 | 22—3—58 | இதழ் 36

'தென்றல்' வாசகர்களுக்கு !

'தென்றல்' வாசகர்களுக்கு மிகுந்த வருத்தத்தோடு ஒரு செய்தியைத் தெரிவிக்கிருேம். பலவகைகளில் பொதுமக்களைத் தொல்லைப்படுத்தி வரும் இந்தியப் பேரரசு இப்பொழுது பத்திரிகைத் துறையிலும் தலையிட்டுத் துன்பப் படுத்தத் தொடங்கியிருக்கிறது. விளம்பர பலமும், இலட்சத்திற்கு மேற்பட்ட வாசகர்களின் ஆதரவும் கொண்ட பத்திரிகைகள் நீங்கலாக மற்ற பத்திரிகைகள் ஈடேற முடியாத அளவுக்குப் பத்திரிகைக் காகிதத்தின் விலை உயர்ந்துவிட்டிருக்கிறது. ரீம் ஒன்றுக்கு ஒன்பது ரூபாய்கள் வீதம் கொடுத்து வாங்கிய காகிதம் இப்பொழுது ரூ. 22 க்குக்கூடக் கிடைக்கவில்லை. இந்தியா பிறநாடுகளை நம்பாமல் வாழுகிறது என்ற 'போலிக் கவுரத்தில்' பைத்தியம் பிடித்து அலையும் 'அரசியல் பிரகஸ்பதி'கள் வகுத்த இறக்குமதிக் கொள்கை விளைவித்த கேடு இது. சர்க்காரைக் கேட்டால் 'இறக்குமதிக் கோட்டா பெற்றுக்கொள்ளுங்கள்' என்கிருர்கள். கோட்டா யாருக்குக் கிடைக்கும்? 'கோட்டாக்'களுக்குப் பெயர்போனவர்களே காங்கிரஸ்காரர்களாக இருக்கும்போது நமக்குக் கோட்டா கிடைத்துவிடுமா? அதுவும் இப்பொழுது முயற்சி எடுத்துக்கொண்டால் அடுத்த ஆண்டுக் கடைசியில் அதற்குப் பதில் கிடைக்கும். ஆம்; வெறும் பதில்தான்; கோட்டா அல்ல. பத்திரிகை வியாபாரிகளைக் கேட்டால் இன்னும் இரண்டு மாதங்களுக்கு இப்படித்தான் இருக்கும் என்று முடிவுகட்டிச் சொல்கிருர்கள். சரி, என்ன விலையானுலும் வாங்குவோம் என்ருல் அதுவும் கிடைக்கவில்லை. வியாபாரிகள் கையை விரிக்கிருர்கள். கடந்த இரண்டு வாரங்களாக நமது சகோதரப் பத்திரிகைகள் படும் அவதி கொஞ்சமல்ல. நம்மை நம்பித்தான் நமது கழகப் பத்திரிகைகள் வெற்றிகரமாக நடைபெற்றுவருகின்றன. என்று ஒவ்வொரு வாசகரும் யோசித்துப் பார்த்தால் நமது பத்திரிகையாளர்கள் படும் துயரத்தை நிச்சயமாக ஓரளவு புரிந்துகொள்ளமுடியும். திங்கட்கிழமையானுல் காகிதக் கடைகளைத் தேடுவதற்கே இரண்டு ஆட்கள் தேவைப் படுகிருர்கள். கடைக்குக் கொஞ்சமாக வாங்கிச் சேர்ப்பதற்குள் புதன் கிழமை வந்துவிடுகிறது. பத்திரிகையோ வெள்ளிக்கிழமையன்று, வெளியூர்களுக்குக் கிடைத்தாக வேண்டும். அப்பப்பா! வெளியில் இருக்கிறவர்கள் என்ன நினைத்தாலும், வாரப்பத்திரிகை என்பது வாரத்திற்கு ஒரு 'பிரசவ'த்தைப் போன்றதுதான்.

இந்த இக்கட்டான சூழ்நிலையை எப்படிச் சமாளிப்பது? அதே பன்னிரெண்டு பக்கங்களைப் போட்டு இதழின் விலையை உயர்த்தினுல் வாங்கும் சக்தி நிச்சயமாகக் குறையும். நமது தோழர்கள் பணக்காரர்கள் அல்ல. நமது தோழர்களில் பெரும்பாலோர், அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியத்தில் மாதத்திற்கு இவ்வளவு ரூபாய் பத்திரிகைகளுக்கென ஒதுக்கிவிட்டு மிகுதியைத்தான் குடும்பத்திற்குக் கொடுக்கிருர்கள். எல்லாரும், கழகத்தின் எல்லா இதழ்களையும் படிக்க விருப்பப்படுகிறவர்கள். இந்த நிலையில் பத்திரிகையின் விலையை உயர்த்த நாங்கள் விரும்பவில்லை. பத்திரிகை வியாபாரிகளும், அரசியல் வட்டாரத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றவர்களும், 'காகிதக் கஷ்டம் இன்னும் இரண்டு, மூன்று மாதங்களுக்குத்தான் நீடிக்கும்' என்று தைரியம் கூறுவதால், அதுவரைக்கும் **எட்டுப்** பக்கங்கள் போட்டு அதே **பதினுறு காசு** விலைக்கே கொடுக்க முடிவு செய்திருக்கிருேம். அதிகம் போனுல் மூன்று மாதங்கள். அதற்குள்ளாக நிலைமை சீர்பட்டால் சரி, இல்லாவிட்டால் நேரடி இறக்குமதிக்கான காரியங்களை இப்பொழுது முதற்கொண்டே துரிதமாகச் செய்து கோட்டாவைப் பெற முயற்சிக்கின்ருேம். வாசகர்கள் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கு இந்தக் குறையை பொறுத்தருளக் கேட்டுக்கொள்கிருேம். கூடுமானவரை, பன்னிரெண்டு பக்கங்களில் கிடைத்த சுவையை கொஞ்சமும் குறையாமல் எட்டுப் பக்கங்களிலேயே தர முயற்சி எடுத்துக்கொண்டு வருகிருேம். பக்கம் குறைந்தாலும் வழக்கமான சுவை குன்ருது. இது உறுதி. நாளை எண்ணிக் கொள்ளுங்கள்—அதிகம் போனுல் மூன்று மாதங்கள்! அவ்வளவுதான்! இடையிலே திடீரென்று பத்திரிகைக் காகிதம் கிடைத்துவிட்டால் உங்களைக் காட்டிலும் நாங்கள்தான் பெரிதும் மகிழ்வோம்.

Statement about ownership and other Particulars about Newspaper THENRAL

1. Place of Publication	...	2/127, Mount Road, Madras-6.
2. Periodicity of Publication	...	Weekly.
3. Printer's Name	...	SP. Arunachalam.
Nationality	...	Dravidian.
Address	...	2/127, Mount Road, Madras-6.
4. Publisher's Name	...	SP. Arunachalam.
Nationality	...	Dravidian.
Address	...	2/127, Mount Road, Madras-6.
5. Editor's Name	...	Kannadhasan.
Nationality	...	Dravidian.
Address	...	2/127, Mount Road, Madras-6.
6. Name and address of individuals who own the Newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.		Sp. Arunachalam, Sole Proprietor. 2/127, Mount Road, Madras-6.

I, SP. Arunachalam, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1-3-'58

SP. ARUNACHALAM.
Signature of Publisher.

வே. வேலாயுதம் செட்டியார்,
(பாகனேரி)

அசோக் பவன்,
காரைக்குடி, 10-3-'58

பேரன்புடையீர்,

வரும் 31-3-58ம் தேதியன்று சென்னை சட்டமன்ற மேல் சபைக்கு (M. L. C.) மதுரை-ராமநாதபுரம்-திருநெல்வேலி-கன்னியாகுமரி மாவட்டங்களின் ஊராட்சி-நகராட்சி மன்றங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட வேண்டிய மூன்று ஸ்தானங்களில் ஒன்றிற்கு நான் அபேட்சகனுக நிற்கின்றேன்.

பொது வாழ்க்கையில் நீண்ட நாளைய அனுபவமுள்ள நான் இந்திய-சீன நல்லெண்ண தூதுக்குழு, சமாதானக்குழு ஆகியவற்றின் சார்பாக நவசீனம், இங்கிலாந்து, சோவியத் யூனியன் உட்படஐரோப்பிய நாடுகள் முதலியவற்றிற்குச் சென்று வந்துள்ளேன். அங்கெல்லாம் நான் கண்டு கேட்ட அனுபவங்களை நமது பண்பாட்டுடன் இணைத்து நமது நகராட்சி-ஊராட்சி மன்றங்களின் மூலம் உழவையும், தொழிலையும், வளர்த்து கலையும் பண்பாடும் உயர்ந்து நமது நாடு வளமடைய என்னுல் இயன்றவரை பாடுபடுவேன்.

எனவே, தங்களின் முதல் வாக்கை எனக்களித்து என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்புமாறு பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

வணக்கம்,

அன்புள்ள,
வே. வேலாயுதம் செட்டியார்.

ADVT.

எங்கும் கிடைக்கும்

குஞ்சரத்தின் கதை

சிப்பாய்களின் பார்வையும் பேச்சும் அந்த வாலிபனை மிரட்டிக்கொண்டிருந்தன. பெண்ணை அழைத்துக் கொண்டுவர அவன் உள்ளே போனான். குஞ்சரத்தைக் கண்டு பிடித்துவிட்டதாகவே சிப்பாய்கள் கருதினார்கள். அந்த நல்ல காரியத்திற்காக சிங்கப்பெருமாள் அம்பலகாரர், அவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கச் சொல்லி கம்பெனி அதிகாரிகளிடம் சிபாரிசு செய்வதுபோலவும், அதனால் பதவி உயர்ந்து விட்டதுபோலவும் அவர்கள் எண்ணி மகிழ்ந்துகொண்டிருந்தார்கள்.

பொன்னழகர் முகத்திலே இன்பம் களைகட்டி நின்றது. பட்டுத்திரைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் அப்பால் ராஜாமகளைப்போல் அம்பலகாரரால் பாதுகாக்கப்பட்டு வந்த கன்னிப்பெண்ணான குஞ்சரத்தை ஒரு குற்றவாளியாகப் பார்க்கப் போகிறோம் என்ற பூரிப்பில் அவர் உள்வீட்டின் வாசற்படியை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். நேரம் ஓடிக்கொண்டிருந்தது. உள்ளே போன வாலிபன் திரும்பி வரவே இல்லை. சிப்பாய்கள், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். கொஞ்சநேரத்திற்குப் பிறகு வீட்டுக்குள்ளிருந்து விம்மல்சத்தம் கேட்டது. அழுகைக் குரலாக இருந்தாலும் அந்தக் குரலில் இனிமை இருந்தது; குழைவு இருந்தது. "நான் வரமாட்டேன்; சிப்பாய்களை இங்கே வரச் சொல்லுங்கள். உங்களுக்கு ஒன்றும் தெரியாது" என்று உள்ளிருந்த அந்தப் பெண் அழுதுகொண்டே சொன்னது வெளியிலிருந்த சிப்பாய்களுக்குக் கேட்டது. சிப்பாய்கள் ஒருவருக்கொருவர் தொடையைக் கிள்ளிக் கொண்டார்கள். பொன்னழகர் சிப்பாய்களை உள்ளே போகும்படி ஜாடைகாட்டினார். தடதட வென்று எல்லோரும் உள்ளே நடந்தார்கள். பொன்னழகர் நாடகத்தில் வரும் 'ராஜபார்ட்' காரரைப்போல் நிதானத்தோடு அவர்களைப் பின் தொடர்ந்தார்.

வீட்டின் உள்ளே ஒரு அழகான சதுரக்கல். அதற்குப் பக்கத்தில் ஒரு 'பன்னாங்குழி'ப் பலகை. சோழிகளுக்குப் பதிலாக புளியங்கொட்டைகள் அதனருகில் குவிக்கப்பட்டிருந்தன. தமிழ்நாட்டில், கவலைப்படும் பெண் மணிகளுக்கும், கட்டுப்பாட்டுக்குள் முடங்கிக் கிடக்கும் குமரிப் பெண்களுக்கும் ஒரு அற்புதமான பொழுது போக்கு பன்னாங்குழி. ஆடவர்கள் நாவல் படிப்பதைப்போல், ஆங்கிலேயர்கள் 'சாட்டர்' (ஒரே ஆள் விளையாடக் கூடிய சீட்டாட்டம்) போடுவதைப் போல் தமிழ்ப் பெண்களுக்கு பன்னெடுங் காலமாகப் பன்னாங்குழி விளையாட்டு இருந்து வருகிறது. தென் பாண்டி மண்டலத்தில் பன்னாங்குழிக்கு அதிக முக்கியத்துவமுண்டு. பன்னாங்குழி விளையாடத் தெரியாத பெண்ணை சமைக்கத் தெரியாத பெண்ணைப்போல் கேலி செய்வார்கள். ஒரு சில இடங்களில் மணமேடையில் கூட பன்னாங்குழி ஆட்டம் நடைபெறுவது உண்டு. தமிழகத்தின் குடும்பக் கட்டுப்பாடுகள் ஆண்களுக்கு, பெண்களுக்கு எனத் தனித் தனியாகத்தான் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆடவர்கள் எப்போதும் ஓய்வு நேரத்தில் தூங்கலாம்–தடையில்லை. யாரோடும் பேசலாம்-கட்டுப்பாடு கிடையாது. ஆனால் பெண்கள் பகல் நேரங்களில் தூங்குவதையும், அரட்டைக் கச்சேரி நடத்துவதையும் நல்ல பெண்கள் விரும்புவதில்லை. அந்தக் கட்டுப்பாட்டுக்காகத்தான் பன்னாங்குழி யாட்டம் தமிழ்ப் பெண்களுக்கு கட்டாயப் பாடமாக்கப்பட்டது போதும்!

பொன்னழகரும் சிப்பாய்களும் உள்ளே போனதும், அசோகவனத்து ஜானகிபோல் இருந்த அந்தப் பெண் எழுந்து முகத்தை மூடிக்கொண்டாள். பின்னிக் கலைந்த கூந்தல் அருவிபோல் அவள் முதுகில் சுளித்துக் கிடந்தது. அவள் ஏன் அழுகிறாள்? எதற்காக முகத்தை மூடிக்கொண்டிருக்கிறாள் என்று எதிரே நின்றவர்கள் யாரும் கேட்கவில்லை.

"குஞ்சரம், என்னைப் பாரு! பொன்னழகு வந்திருக்கிறேன். பயப்படாதே! என்னைத் தெரியவில்லையா உனக்கு? நான்தான் இளையாத்தக்குடி ஜமீன்தார்?"

"என் பெயர் குஞ்சரமில்லையே!"

"கோயில் வீட்டிலே வைத்தபெயர் வேறாக இருக்கும். ஊரிலே உன்னைக் கூப்பிடுவது குஞ்சரம்தானே!"–என்றார் ஜமீன்தார். அவர் முகத்திலே சிறு பிள்ளைத்தனமும் பலவீனமும் பின்னிப் பிணைந்திருந்தன.

"மன்னிக்க வேண்டும் முதலாளி. எனக்கு ஒரே பேர்தான். கண்ணம்மா என்றுதான் எல்லோரும் என்னைக் கூப்பிடுவார்கள். குஞ்சரம் நான் இல்லை" என்று துல்லிதமாகப் பதில் சொன்னாள் அந்தப் பெண். பொன்னழகருக்கு முகம் கறுத்தது. எதுவும் செய்ய முடியாதபோது எப்படிப்பட்ட பலசாலிகள் முகத்திலும் அசடு வழியத்தான் செய்கிறது! பொன்னழகர் காரணமில்லாமல் சிரித்தார். அந்தச் சிரிப்பில் வரட்டு ஒலியைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. சிரிப்பு உள்ளத்திலே இருந்து பிறக்கும் போதுதான் அந்தக் குழப்பமான ஓசையில் கூட இனிமை இருப்பதாகப் படுகிறது. இன்னும் சொன்னால் அதைத்தான் சிரிப்பு என்று சொல்ல வேண்டும். உலகத்தில் வெகுபேர் பெரும்பாலான இடங்களில் பல் வரிசைகள் தெரியும்படி செய்து அதைச் சிரிப்பு என்று எண்ணத் தூண்டுகிறார்கள். சிரிப்பல்ல அது! உண்மையான சிரிப்புக்கு திட்டமிருக்காது. மந்திரிகளுக்கு தெரியாமல் வரும் ராஜகட்டளையைப் போல் திடீரென்று வரும். அதுதான் சிரிப்பு.

அந்தப் பெண் குஞ்சரமல்ல என்பதைத் தெரிந்துகொண்ட சிப்பாய்களுக்கு கோபம் பீறிட்டுக்கொண்டு வந்தது. அந்த இளைஞனை மிரட்ட ஆரம்பித்தார்கள்.

"ஏண்டா, நீ ஏன் வேஷம் போட்டுக்கொண்டு அலைகிறாய்? உள்ளதைச் சொல்லு! இந்தப் பெண் யார்?" என்று கரடிக்குரலில் பேசினான் ஒரு சிப்பாய். மற்றவர்கள் அந்தக் குரலுக்கும், அந்தக் குரலுடையவனின் குணத்திற்கும் வீரமும் காரமும் ஊட்டினார்கள். ஜமீன்தார் பொன்னழகர் சிப்பாய்களுக்கு கண்ணைக் காட்டினார். அக்கினிப் பர்வதத்தின் முகட்டில் நின்ற சிப்பாய்கள் உடனே அடிவாரத்திற்கு வந்து விட்டார்கள். 'பாவம் போகிறான். சின்னப் பயல்! வாலிபச் சேட்டை! இதையெல்லாம் கண்ணிலே போடலாமா? நமக்கு, வாங்க குஞ்சரத்தைத் தேடுவோம்" என்றார் ஜமீன்தார். உண்மையிலேயே 'வாலிபச் சேட்டை'க்கு மதிப்புத் தந்தா? பொன்னழகர் வீடு திரும்பினார்? யார் கண்டது? நரிபிடிப்பதில் எத்தனையோ விதமுண்டு. சில பேர் மெலிந்த மாடுகளின் மறைவிலே இருந்து பிடிக்கிறார்கள்; வேறு சிலர் கன்னி வைத்துக்கூடப் பிடிக்கிறார்கள்!

சிப்பாய்கள், வரும் வழியில், கீரணிப்பட்டி என்ற ஊரில் பொன்னழகரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டார்கள். பொன்னழகர் இரவு நடுச்சாமத்திற்குமேல் இளையாத்தக் குடி வந்து சேர்ந்தார்.

ஜமீன்தார் குடும்பங்களில், முக்கியஸ்தர்கள் வெளியூர் போயிருந்தால் எவ்வளவு நேரமானாலும் வந்தவுடன் எல்லா விபரங்களையும் விசாரித்து விட்டுத்தான் தூங்கப்போவது வழக்கம். பொன்னழகர் ஜமீன்தார் பட்டம் பெற்றதிலிருந்து அந்தப் பரம்பரை வழக்கத்தை விடாமற் பின்பற்றினார். காவற்காரனிலிருந்து கணக்கப் பிள்ளைவரை தட்டி எழுப்பிக் கேட்டு விட்டுத்தான் படுக்கப் போவார். அதற்கு முக்கியமான காரணம் பொன்னழகருக்கு அந்த வட்டாரத்தில் எதிர்ப்பு அதிகமாக இருந்தது. இளையாத்தக்குடியிலிருந்து சுமார் நான்கு மைல் தொலைவிலிருந்த இரணியூர் செண்பகராமன் சேர்வை விவசாயிகள் படையைத் திரட்டிக் கொண்டு பொன்னழகரை எதிர்த்தான். இன்னொரு பக்கத்தில் ஜமீன் சொத்தில் பத்திரம்-பட்டா பற்றிய தகராறு. கஷ்டமும் கவலையும் ஏழை, பணக்காரன் எல்லோருக்கும்தான் இருக்கின்றன. ஆனால் இருசாராரும் ஒரே தத்துவத்தை வெவ்வேறு கட்டங்களில் பிரயோகித்துக் கொள்கிறார்கள். ஏழை, கூழுக்கு உப்பில்லை என்பதை வறுமை என்கிறான். பணக்காரன் விருந்துகள் நடத்துகிற அளவுக்கு விளைச்சலில்லாததை வறுமை என்கிறான். மொத்தத்தில் இரண்டு பேரும் ஆண்டவனை நினைத்து இணைந்து பாடும் கோரஸ் ஒன்றுதான்.

பொன்னழகர், எதிரிகள் ஏதாவது தீங்கு செய்திருப்பார்கள் என்ற சந்தேகத்தில் எல்லோரையும் எழுப்பி விசாரித்தார். அப்படி யொன்றும்

எஸ். எஸ். தென்னரசு

பாதகமான சம்பவங்கள் நடந்ததாக யாரும் தெரிவிக்கவில்லை. கணக்கப் பிள்ளை மட்டும் பொன்னழகரைத் தனியே அழைத்துக் கொண்டு போனார். இருட்டாகையால், காவல்காரன் எண்ணெய் விளக்கை பின்னாடிக் கொண்டு போனான்.

"எசமான், ஒரு முக்கியமான தகவல்! நீங்க ஆச்சரியப்படுவீங்க. நம்ப மான்கொம்பு செத்துப் போய்ட்டாருன்னு நெனைச்சுக்கிட்டிருந்தோமே... அவரு சாகல்லே! இங்கே வந்திருக்காரு. நம்ப மாடியிலேதான் தூங்குராரு"— என்று கணக்கப் பிள்ளை அக்கம்பக்கத்தைப் பார்த்துக் கொண்டு மெதுவாகச் சொன்னார். பொன்னழகரால் அந்தச் சேதியை நம்பவே முடியவில்லை. காவல்காரன் கையிலிருந்த விளக்கைப் பிடுங்கிக் கொண்டு 'மடமட'வென்று மாடிக்குப் போனார். அங்கே வேல் கம்பு, அரிவாள், சகிதமாக மான்கொம்பு நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தார். பொன்னழகர் முகம் மலர்ந்தது. இதயம் குளிர்ந்தது. உடம்பு விம்மிச் சுருங்கியது. பெருமூச்சுவிட்டார். தனக்குள்ள சொத்தில் நாலில் ஒரு பங்குகூட இல்லாத சிங்கப்பெருமாளின் கொட்டத்தை சதி செய்து அடக்க சரியான துணையில்லாமற் தவித்த பொன்னழகருக்கு மான் கொம்பு கிடைத்தது முப்படையும் கிடைத்தது போலவே இருந்தது. ஆனால் அவருக்கொரு சந்தேகம்! "மான்கொம்பு இறந்துவிட்டதாக பேசிக்கொள்ளப்பட்டதே! புலிமச்சத்தைக்கூட அதற்கு சான்று காட்டியதாகச் சொன்னார்களே"—பொன்னழகர் குழம்பினார்.

- தொடரும் -

வெண்பாப் போட்டி-14.

ஈற்றடி :

கலைக்கும் கலையாக் கலை.

முடிவு தேதி 5-4-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

- 17 -

அமுதவல்லியின் அழகைக் காண இந்த அருணாசலத்திற்கும் ஏதாவது அழுது தொலைக்க வேண்டியிருக்கிறதே என்று நொந்தவனாய் விடுதி நோக்கி நடந்தான்.

அருணாசலத்தை ஆட்கொல்லி என்று எண்ணினான். ஆனால் அருணாசலமோ ஞானசம்பந்தனைக் 'கறவைமாடு' ஆக்கிக் கொள்ளத்திட்டமிட்டுவிட்டான். எங்கோ இருந்து எங்கோ வந்த அருணாசலம், யாரோ ஒரு ஞானசம்பந்தனைக் கறவை ஆக்கிவிட நினைத்துவிட்டது வேடிக்கை தான்.

அருணாசலத்தை நன்றாகப் புரிந்துகொண்டால் அந்த வேடிக்கையின் உண்மை உருவம் நன்கு புலனாகும்.

அருணாசலம் எப்படிப்பட்டவன் என்பதை நிச்சயித்துக் கூறிவிட முடியாது. சில நேரங்களில் பணிந்து படிவான், சில வேளைகளில் பிறர் தனக்குப் படிந்து நடக்கவேண்டும் என்று எண்ணுவதுபோல் நடந்து கொள்ளுவான். இனிப்பாகப் பேசுவதும் அவனுக்குத் தெரியும். இடிக்குரலில் முழங்கி ஆர்ப்பரிக்கவும் அறிவான். எப்படியாவது தேவையான அளவு பணம் தேடிட வேண்டும் என்று மட்டும் உறுதிகொண்டவன். சின்ன வயதிலேயே தந்தையின் சொல்லைத் தட்டி நடக்கப் புழக்கப்படுத்திக்கொண்டு செலவுக்கான வழிகளைப் புதிது புதிதாக அறியத் தொடங்கினான். வீட்டிலே இருந்த சாமான்கள் வைத்த இடத்தைவிட்டு மறையத் தொடங்கின. சில வேளைகளில் அவையெல்லாம் பொருளாகிப் புகையாகி வீணாவது நெடுநாட்களுக்குப் பிறகுதான் அவன் தந்தைக்குத் தெரிந்தது. ஆனால் அந்த நேரத்தில் தெரிந்தும் அதனால் அவனைத் திருத்திப் பயன் விளையும் பருவத்தை அருணாசலம் தாண்டிவிட்டான். கைக்கு அடங்கிய பிள்ளையாக இருந்தவன் கண்ணுக்கு எட்டாத தொலைவில், கருத்துக்கு இனிக்காத வழிகளில் ஆடி அலைந்தான். பணத்தைத் தேடிப் பரிதவித்தான்.

நொந்து நொந்து நோய் கொண்ட அருணாசலத்தின் தந்தை ஒருநாள் செத்தே போனார். தந்தையின் மறைவு கொஞ்சம் வருத்தத்தை உண்டாக்கியது. என்றாலும் இரும்புப் பெட்டியின் சாவி கைக்குக் கிடைத்ததே என்பதில் பெரு மகிழ்ச்சி அடைந்தான். ஆனால் அந்த மகிழ்ச்சி இரும்புப்பெட்டியைத் திறந்து பார்க்கின்ற வரைதான் நிலைத்தது. அதைத் திறந்து உள்ளே பணத்தின் குவியல் இல்லை என்பதை அறிந்த கொண்டபோது அருணாசலம் அடைந்த வருத்தம் எல்லையற்றது. இரும்புப்பெட்டி இரும்புப் பெட்டியாக இல்லாமல் இல்லாமைப் பெட்டியாக இருந்தபோது வாழ்க்கையின் உண்மையைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும் அவன்.

வெளியில் காணும் தோற்றத்திற்கும் உள்ளே இருக்கும் இயற்கைக்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது! பளபளப்பாக இருப்பதெல்லாம் பட்டுத்துணி என்றும் சொல்லிட முடியவில்லை. மேலே முரட்டுத் தோற்றம் இருந்தால் உள்ளே இனிப்புப் பண்டம் இருக்கிறது.

உலகம் உருண்டை என்று சொல்லுகின்றார்கள். ஆனால் அறிவியல் (விஞ்ஞானம்) அறிஞர்கள் அந்த உருண்டை கோழி முட்டை வடிவம் உடையது என்கிறார்கள். அப்படியானால் உலகம் ஒரு பலாப்பழம் என்று சொல்லலாம். பலாப்பழம் பார்வைக்குச் சுவைப்பதில்லை. பார்வைக்கு விருந்து தராத அந்தப் பழத்தின் மணம் நெடுந்தொலைவு வந்து மணக்கிறது. எங்கே மணம் எதிலிருந்து வருகிறது. என்று ஏங்கி அலைந்தாலும் இங்கிருந்துதான் என்று சொல்ல இயலாதவாறு முள்ளு முள்ளாக மேனியின் மேல்புறம் இருக்கிறது. அந்த முள்ளு மேனிக்குள் சடையும் பசையுமாக தடைக் கற்கள் பல. அதையும் தாண்டி அப்பாலே போனால் எதையும் தோற்கடிக்கும் இனிப்பின் இருப்பிடம் எனத்தகும் பழத்தின் உயிர்! இதுதான் உலகம்! இந்த உண்மையை உணர்ந்தால்ப் போதும் உலகத்தில் பாதி தொல்லைகள் குறைந்துவிடும். ஆனால் யாருக்கு இவ்வளவும் நினைவிருக்கிறது? அருணாசலத்திற்கு எங்கே இந்த உண்மை தெரிந்திருக்கப் போகிறது? அதனால் இரும்புப் பேழையில் இருப்பு இல்லாததைக் கண்டதும் ஆத்திரம் வந்தது அவனுக்கு. அந்த ஆத்திரத்தை இரும்புப்பெட்டியின் கதவின்மீது காட்டிடுவது போல் அதை அடித்து மூடினான்.

நிமிர்ந்து பார்த்தான். தான் தேடிய பொருள் எதிரில் நிற்பது போல் நினைத்தான். அமுதவல்லி அங்கே வாயிற்படியில் சாய்ந்து நின்றாள். சரிந்துவிழும் அழகுபோல் இருந்தது சாய்ந்து நின்ற அவள் தோற்றம்.

அமுதவல்லி அருணாசலத்திற்கு உறவு உடைய பெண். அவளுடைய சின்னவயதிலேயே தாயும் தந்தையும் இறந்து போனதினால் அருணாசலத்தின் தந்தை அவளை எடுத்து வந்து தன் வீட்டில் வளர்த்து வந்தார். அவள் சின்னப் பெண்ணாக சிணுங்கி வளர்ந்தபோது அருணாசலம் அவளைப் பார்த்திருக்கின்றான். ஆனால் வெளி உலகில் அலைந்து திரிந்த அவன் சின்னப் பெண் சிலைபோல் வடிவும் வனப்பும் பெற்றதைக் காணத் தவறினான். தவறினான் என்பதுகூட தவறு. காண நேரம் இல்லாமல் தவித்தான் என்பதுதான் உண்மை.

இன்று வாயிலில் சாய்ந்திருந்த அந்த வடிவழகியைக் கண்டதும் இரும்புப் பெட்டி தந்த ஏமாற்றத்தை மறந்தான். அங்கு இல்லாத ஏதோ ஒன்றை இங்குக் காணுவதாக நினைத்தான்.

வாயிலில் சாய்ந்திருந்த அமுதா அவனுக்கு அழகின் மறு பதிப்பாகமட்டும் தோன்றவில்லை; அள்ள அள்ளக் குறையாத மாநிதியமாகத் தோன்றினாள்.

அந்தப் பேரழகியைத் தன் பெருமாட்டி ஆக்கிக்கொள்ள நினைத்து அவன் மகிழ்ச்சி அடையவில்லை. மனை விளக்கும் மாண்பாக்கிக்கொள்ள அவன் மனத்தில் மகிழ்ச்சி பிறக்கவில்லை.

ஆனால் பேழை நிரப்பிக் கொள்ள கிடைத்த பெரும் பொருள் எனத் தீர்மானித்துவிட்டான். அவளை முதலாகக் கொண்டு 'மூலதனம்' திரட்ட நினைத்துவிட்டான் அவன்.

அந்த நினைப்பைச் செயல்படுத்த துணிவு தேடிக்கொண்டான். தான் தேடிக்கொண்ட அந்தத் துணிவை அமுதவல்லிக்கு ஊட்ட நினைத்தான். ஆனால் அவளோ அவன் கெடு நினைப்பைக் கேட்டதும் அலறினாள், அஞ்சினாள், அரற்றினாள், அல்லலுற்றாள்– அழுதாள்– இவ்வளவுதான் செய்ய முடிந்தது. அந்த அபலையால் ஆனால் அவனோ அவளுக்கு ஆசை காட்டினான், அச்சுறுத்தினான், அல்லற்படுத்தினான், ஆர்ப்பரித்தான். அடித்தான்-துணிந்து ஒரு நாள் ஒய்யார விலாசுககே அழைத்துக் கொண்டு வந்துவிட்டான்.

அமுதவல்லி அழகின் பிழம்போ என்னமோ அதைக் காணும் கண் அவனுக்கு இல்லை. அவன் படைத்திருந்த கண் பெற்றிருந்த பார்வையில் பணம்மட்டும்தான் தெரிந்தது. அதனால் தான் அமுதாவின் அழகை யாருக்கேனும் அளித்து அவர்கள் அள்ளித் தரும் பணத்தை எண்ணிப் பார்க்க எண்ணம் கொண்டான். அந்த முயற்சியில் இறங்கிய முதல் நாளிலேயே எவ்வளவோ தடைகள்! அதனால்தான் அவன் கிடைத்த ஞானசம்பந்தனை விடாமல் பற்றிக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துவிட்டான்.

'பத்து ரூபாய் கொடுத்தேனே' என ஞானசம்பந்தன் சொன்னவுடன் 'அது அப்போதைக்கு-இப்போதைக்கு ஏதாவது எடு' என்று கொடுத்திருந்தவன்போல் கேட்டான். இந்த வகையில் வருவது கொண்டு வாழ அருணாசலத்தின் மனம் திட்டமிட்டுவிட்டது.

ஆனால் ஞானசம்பந்தனோ இது ஒன்றும் தெரியாமல் அருணாசலத்தை ஆட்கொல்லி என்று எண்ணி வருந்தினான். அன்று இரவு மாணவர் விடுதியில் நெடுநேரம் இதைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தான்.

அமுதவல்லியின் அழகை மறக்க எண்ணினான், இயலாது

— 7ம் பக்கம் —



'சரிதா' எனும் வடநாட்டு இதழில் வெளியான கவிதையொன்றை ஆதாரமாகக் கொண்டு துறையூர் தோழர் ந. அலி, இக்கவிதையை வடித்துத் தந்துள்ளார்.

சிவன் மேல் எழுந்த சினம்

கார்முகில் பொய்த்துப் போகும்
கடலலை வற்றிப் போகும்
நீரலை எழுந்து பொங்கும்
நித்திலக் கங்கை மட்டும்
பார்மிசை வற்ற தென்றும்
பயனளித் தருள்பா லிக்கும்
நீர்மைய தென்று லாரும்
நெஞ்சினில் வியப்புக் கொள்ளார்

வான்வரை வளர்ந்த சோலை
வனமிகு கங்கை யோரம்
கூன்பிறை தலையில் சூடி
கண்ணுத லரனர் மங்கை
மான்விழி உமையா ளோடு
மனமகிழ்ந் திருக்குங் கோவில்
நூன்முறை விளக்கந் தாங்கி
நிற்கிற எழில்தான் என்னே !

பாமரன் படித்தோன் ஏழை
பணமுத லாளி யெல்லாம்
தாமரைக் கண்ணன் முன்னம்
சமமென ஓது கின்றார்
ஊமையும் செவிடும் ஈசன்
ஒண்கழல் தாளைத் தொட்டால்
ஏமமும் நலமும் பெற்று
இன்புறும் நெறியைக் காண்பர்

கல்லினைச் சிலையாய்ச் செய்து
கவினுறு வண்ணந் தீட்டி
சொல்லருந் துன்பம் ஏற்றுத்
திருவெழில் கோவில் கட்டி
மல்லினுக் குயர்ந்த தோளான்
மாதவச் சிவனைக் கோவில்
நல்லிடஞ் சேர்த்தான், பின்னர்
நாதனைக் கண்டா னில்லை.

"திரிபுரம் எரித்த ஈசன்
திருவருள் எங்கட் கல்லால்
இருநிலந் தன்னில் வேறே
எவ்வினத் தார்க்கும் இல்லை
அரிசன மக்கள் கோவில்
அம்பல மேறு வாரேல்
விரிசடைச் சேயோன் வாழ்வில்
வேதனை சூழ்ந்து கொள்ளும்."

என்றெலாம் பொய்யைச் சொல்லி
ஏய்த்தனர் வேதம் வல்லோர்
நின்றெரி யும்நெ ருப்பில்
நெய்யினைப் பெய்தாற் போல
குன்றனைத் தோள்கள் வீங்கக்
குமுறிடும் நெஞ்சம் விம்ம
சென்றனர் அரிச னங்கள்
சிவனருள் வேட்டல் வேண்டி.

வேதியர் தடுத்தார், மக்கள்
வெள்ளமாய் உள்ளே சென்று
மாதவச் சிவனார் முன்னம்
மண்டியிட் டருள்யா சித்தார்
"தீதுசூழ்ந் துளது, வேதம்
தீய்ந்திடும், சிவனு ருக்குச்
சேதமுண் டாகும்" என்று
தலைமைப்பூ சாரி சொன்னான்.

"காசியில் வீற்றி ருக்கும்
கண்ணுதல் கோவி லுள்ளே
வேசியர் புதல்வர், கீழோர்
விரைமலர் ஏந்திக் கொண்டு
பூசனை புரிந்தார்; ஈசன்
பொன்னுடல் மாசு பட்டு
வாசனை இழந்த பூப்போல்
வாடியே கிடக்கு தந்தோ !

அரிசன மக்கள் என்றால்
ஆண்டவர் அடியார் என்றே
உரைப்பதில் பொருளே இல்லை
உலுத்தரே அவர்கள் எல்லாம்
விரிமலர் ஈசன் பாதம்
வேண்டிட உரிமை யில்லார்
கரியுடல் கீழோ ருக்குக்
கடவுளின் அருளா வேண்டும் ?

ஆரியம் உலகிற் கீந்த
ஆத்திக நண்ப ரே நீர்
வாரியைத் தலையில் தாங்கி
வையகம் புரக்கும் ஈசன்
தேரிய கோவில் சென்று
தேமலர் சூடம் வைத்து
நேரிய முறையில் பூசை
நிகழ்த்திட வேண்டாம் ! வேண்டாம் !

கங்கையின் புனலில் காசிக்
கடவுளை நனைத்தால் கூட
மங்கலம் கிட்டா தந்த
மாசுடல் நீங்கா துண்மை
இங்ஙன மாயின் எங்கள்
இனத்தவர்க் காக வேறு
மங்கலக் கோவில் கட்டி
மனமகிழ் வூட்ட வேண்டும்.

எழுப்பிடுங் கோவில் உள்ளே
இழிமகன் பறையன் சென்று
வழிபடக் கூடா தின்றேல்
வாணுதல் கண்ணன் மேனி
புழுதியில் கிடந்து வாடும்
பூசுரர் உள்ளே செல்லார்
இழிமகன் உணரு மட்டும்
இவ்விதம் நடப்போம் நாங்கள்."

விடுதலைப் படைந டாத்தும்
வீரனைப் போல, காசி
அடியவர் தலைவர் செந்தீ
அனலினைக் கக்கி, இந்தக்
கடுமொழி உரைத்தார், மக்கள்
காதிலே கேட்ட வண்ணம்
நடக்கிறார்; அவரென் செய்வார் ?
அமைச்சரே நடுங்கு கின்றார்.

கட்செவி ஆரம் பூண்ட
கடவுளின் கோவில் வாயில்
உட்செலக் கூடா தென்றே
ஓதுவார் எல்லாஞ் சேர்ந்து
நிச்சயம் செய்துள் ளார்கள்
நிர்மலச் சிவனார்க் கோட்டம்
அர்ச்சனை பூசை யின்றி
அமைதியாய் இருக்கு தாங்கே !

அனைவரும் சமமென் றோதும்
அறிவொளி பரந்த நாளில்
இனமெனும் பெயரால் செய்யும்
இழிசெயல் மக்கட் கெல்லாம்
சினத்தினை உண்டு பண்ணும்;
சிறுமதி யாளர் செய்த
வினையினால் நெஞ்சம் வேகும்
வேதனை பெருகும் வாழ்வில்.

14-4-58ம் தேதியன்று

பன்மொழிப்புலவர் பொன்விழா நிதிக்காக

கலை நிகழ்ச்சிகள்

அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில்

கண்ணதாசன் குழுவினர் நடிக்கும்

மணிமண்டபம்

— நாடகம் —

டி. ஆர். மகாலிங்கம்—இசை

மற்றும் பல நிகழ்ச்சிகள்.

சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாடு

சென்னை மாநிலத் தமிழாசிரியர் நான்காவது மாநாடு ஏப்ரல் திங்கள் 26, 27ஆம் நாட்களில் கோயம்பத்தூரில் நடைபெறும். தற்போது, தமிழ், சென்னை மாநிலத்தின் அரசியல் மொழியாக மேற்கொள்ளப்பட்டு இருப்பதால், தமிழ் ஆசிரியர்களின் பொறுப்பு வளர்ந்துள்ளது. தமிழ் ஆசிரியர்களைத் தற்போது எதிர் நோக்கியுள்ள சிக்கல்களைப்பற்றி ஆராயப்படும். மேலும், அரசியல் துறைக்கும், வேறு துறைகட்கும் ஏற்பத் தமிழ் மொழியை எப்படி வளப்படுத்துவது என்பதையும், வேறு பல செய்திகளையும்பற்றி மாநாடு ஆராயும். இன்றைய சூழ்நிலையில் இத்தகைய மாநாடு மிகவும் நன்மை பயப்பதொன்று என்பதைக் கூற வேண்டியதில்லை. இம்மாநாடு வெற்றி பெற, தமிழாசிரியரும், பொதுமக்களும் தங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தங்களன்புள்ள,

தா. ஏ. ஞானமூர்த்தி,
செயலாளர்.



முதுகுளத்தூர்(க்) கடிதம்

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,
வணக்கம்.

சென்னை மாநிலத்தில் பணியாற்றும் நலத்துறையைச் (Public Health Department) சார்ந்த அலுவலர்களில் பலருக்கு பலத்த சோதனை ஏற்பட்டிருக்கிறது. நகர்களிலும், சுற்றுப்புறக் கிராமங்களிலும் ஏற்படும் பெரியம்மை (Small-Pox) எனும் தொத்து நோயினைப்போக்க, சுழன்றோடிப் பணியாற்றும் 'நலத்துணையாளர்கள்' (Health Assistants) பலர், அவதியுறும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

நம் மாநிலத்தில் மட்டும், அவசரப் பயிற்சி பெற்ற (Emergency Trained) நலத்துணையாளர்கள் பலர் பணியாற்றுகின்றனர். இவர்கள் 'மாவட்ட சுகாதார அதிகாரி'யால் (District Health Officer) பதவிக்கு நியமிக்கப்படுகின்றனர். அவசரப் பயிற்சி பெற்ற இந்த நலத்துணையாளர்கள், பல ஆண்டு காலமாகப் பணியாற்றியும், நிரந்தரமாக்கப்படாமலேயே ஆக்கப்படுகின்றனர். பத்தாண்டு உழைப்பவர்கள் கூட 'இன்க்ரிமெண்ட்' பெறுமலேயே இருக்க வேண்டிய நிலையை, அரசியலார் சட்டத்தில் புகுத்தியுள்ளனர். மாவட்ட சுகாதார அதிகாரி எப்போது நினைத்தாலும், அவர்களைப் பதவியினின்று— காரணமின்றி-நீக்கவும் சட்டம் வழி வகுத்து வைத்திருக்கிறது.

சென்னை மருத்துவக் கல்லூரியில் (Medical College) தங்களது சொந்தச் செலவில், ஓராண்டுக் காலம் 'சானிட்டரி இன்ஸ்பெக்டர்' பயிற்சி பெற்றவர்களையே நியமிக்கும்படி, 'மாநில நலத்துறை இயக்குநர்' (Director of Public Health) அவர்களின் கட்டளை ஆணையிடுகிறது. அதன்படி சட்டம் அமுலாக்கப்பட்டு அவசரப் பயிற்சி பெற்றவர்கள் நீக்கப்பட்டும் வருகின்றனர். வயது சென்ற காரணத்தால், மீண்டும் வேறொரு துறையில் புக முடியாதபடி நிலை ஏற்படுகிறது.

ஒவ்வொரு மாதத்திற்கும் நான்கு தடவைகள், கிண்டி அரசினர் கழக (Guindy, King Insitute) த்தினரால் பெரியம்மையைத் தடுக்கும் மருந்துகள் அனுப்பப்படுகின்றன. இதில், சில சமயங்களில் அம்மை குத்தியது போக, மருந்துகள் மீதப்படுவதும் உண்டு. இவற்றிற்கெல்லாம் தொகையை நலத்துணையாளர்களே, தம் கையிலிருந்து கொடுக்க வேண்டும்.

தாலூகாத் தலைமையிடத்தில் பணியாற்றி வந்தாலும், நலத்துணையாளர்களுக்கு வீட்டு வாடகை கிடையாது. இவர்களுக்கென 'ஆடைத் தொகை' (Dress Allowance) இல்லை. குறிப்பிடப்பட்டிருக்கும் அளவுகளுக்குமேல் மருந்துகள் வரவழைத்து கிராமங்கட்குச் சென்று அம்மை குத்தினாலும் அதற்கென தனி பிரயாணப் படி கிடையாது.

இவ்வாறு அல்லலுறும் 'அவசரப் பயிற்சி பெற்ற நலத்துணையாளர்களது' (Emergency Trained Assistants) அவல நிலை, கீழ்க்கண்டவாறு தீர்க்கப்பட வேண்டும்.

(1) அவசரப் பயிற்சி பெற்ற நலத்துணையாளர்களை அரசியலாரே தம் சொந்தச் செலவில் சென்னை மருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெற அனுப்ப வேண்டும்.

(2) பயிற்சி பெறுங் காலத்தே, அவர்களுக்கென தனி ஊதியம் (Stippend) தரப்பட வேண்டும்.

(3) வீட்டு வாடகை, ஆடை அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டும்.

(4) குறிப்பிட்ட அளவுகட்கு மேல் மருந்துகள் வரவழைத்து, நலத்துணையாளர்கள் பணியாற்றினால், அதற்கென தனிப் பயணப் படியும், சிறு-தொகை (Contingent)யும் அளிக்கப்பட வேண்டும்.

(5) இவர்கள் மாவட்டக்கழக ஊழியர்களாக இல்லாமல், சென்னை சர்க்கார் ஊழியர்களாக ஆக்கப்பட வேண்டும்.

இக்குறைகள் தீர்க்கப்பட்டு, அவர்கள் புதிய வாழ்வு காணும் நாள் என்நாளோ?

13-3-58. **கங்கை-எமராசன்,**
முதுகுளத்தூர்.

இதுவரை உலகோர் கண்டிராத புதுமை!

ஓவியர் முத்து அளிக்கும்

புதுமுறை ஆட்டோகிராப்

அரசியல் துறையினர், தி. மு. க. துணைவர்கள், சினிமா நட்சத்திரங்கள், கவிஞர்கள், பேச்சாளர்கள், எழுத்தாளர்களின் உருவப் படங்கள், போட்டோ ஆப்செட்டில் அச்சிடப்பட்டது.

மிகவும் குறைவான விலை ரூபாய் ஒன்று மட்டும்.

விபரங்களுக்கு :-
ரெயின்போ கன்சர்ன்ஸ், சென்னை-4.

சென்னை விற்பனை உரிமையாளர் :-
சதர்ன் நியூஸ் கம்பெனி, சென்னை-2.

நாடெங்கும் விற்பனையாளர் தேவை.

வி. பி. பி., பாங்கு, ஆர்டர் முதலியவை கவனிக்கப்பட மாட்டாது. மாதிரி ஒரு பிரதி ஒன்றுக்கு ரூபாய் 1-4-0 விதம் முன்பணம் அனுப்பவேண்டும். ADVT.

வழக்கு நிதிக்காக

22-3-58 சனி மாலை 6-மணிக்கு
சென்னை ஒற்றைவாடையில்

அறிஞர் அண்ணா முன்னிலையிலும்
நாவலர் நெடுஞ்செழியன் தலைமையிலும்
கலைஞர் கருணாநிதி நடிக்கும்

உதயசூரியன்

நாடகம் நடைபெறும்

நன்கொடை : ரூ. 5, 3, 2, 1.

— 5ம் பக்கத் தொடர்ச்சி —

என அந்த எண்ணத்தை விட்டொழித்தான். ஒருவேளை மறந்தால் என்ன என்ற துணிவு வந்தபோது ஏகாம்பரத்தின் பசித்த கண்கள் அவன் மனத்தில் தெரிந்தன. தனக்கு இல்லாத ஒன்று அவனுக்கா என்று பொருமினான். ஆனால் அமுதவல்லியின் அழகோடு அருணாசலத்தின் ஆசை பிணைந்திருந்தது. பெரும் பசி கொண்ட அவன் வாய்க்கு அரிசி போட்டால் போதும் அமுதவல்லியின் அழகு அத்தனையும் தனக்கே ஆகிவிடும் என முடிவு கட்டினான். எப்படியும் அருணாசலத்தின் ஆசையைத் தீர்ப்பதானால் பணம் தாராளமாக வர வேண்டுமானால் ஊரிலிருந்து அப்பா அனுப்பினால்தான் என்றுதெளிந்தான். ஊரிலிருந்து தடையின்றிப் பணம் வர வேண்டுமானால் படித்தால்தான் அதுவரும்என்று எண்ணியதும் தன்மீதே ஞானசம்பந்தனுக்குக் கோபம வந்தது.

அமுதவல்லியை அடையதான் படித்தாக வேண்டும். அதுவும் நன்றாகப் படித்தாக வேண்டும். அப்போதுதான் ஊரிலிருந்து பணம்ஊற்றெனப்பெருக்கெடுக்கும் என்று தீர்மானித்தான்.

அதற்குப் பிறகு ஒரு உற்சாகம் உண்டாயிற்று அவனுக்கு. இதுவரை இல்லாத ஊக்கம் படிப்பில்தானே வந்து படிந்தது. படிந்திருந்த தூசியைத் துடைத்தான். துடைத்துவிட்ட புத்தகங்களை விரித்தான். மறு நாள் முதல் படிப்பு படிப்பு என்று அதிலேயே ஆழ்ந்துவிட்டான்.

எதற்கும் மனதில் ஊக்கம் தோன்ற வேண்டும். அந்த ஊக்கம் தோன்றினால் போதும் அது எல்லாச் செயல்களையும் முடிக்கின்ற ஆற்றலைத் தந்துவிடும். முடியாத செயல்களையும் முயன்றால் முடித்துவிடலாம் என்ற நம்பிக்கையை ஊட்டும். உடலிலே ஆற்றல் இருப்பது உண்மைதான். ஆனால் அந்த ஆற்றல் உள்ளத்திலே உள்ள ஆற்றலினால்தான் உறுதியாகின்றது. உறுதி இருந்தால்தான் உழைப்பு பிறக்கும்; உழைப்பு இருந்தால் தான் பயன் விளையும்.

ஞானசம்பந்தனின் உள்ளம் இப்போது அத்தகைய உறுதியைப் பெற்றுவிட்டது. பெற்ற அந்த உறுதி செயல்படத் தொடங்கியவுடன் அவன் பிறவற்றையெல்லாம் மறந்தான். வீண் களியாட்டங்களை மறந்தான்; வெற்றுரையாடல்களைத் துறந்தான். படிப்பில் தன் நினைவைச் செலுத்தினான். அமுதாவின் அழகை அள்ளிப் பருகினான். இதனை யாரும் அறியாமல் மூடி மறைத்துத்தான் வைத்தான். ஏகாம்பரத்திற்கும் எட்டாத இடத்தில் தான் இந்த வாழ்க்கையை வைத்திருந்தான்.

அதனால் இரண்டொரு முறை ஏகாம்பரம்கூட "என்ன ஞானசம்பந்தா திடீர் திடீர் என்று புத்தகத்தைத் தேடி அலைகின்றாய் 'நீ ரொம்பக் கெட்டுவிட்டாய் இப்படியா எந்நேரமும் எழுத்தைத் தின்பது? புத்தகத்திலே கொஞ்சம் விட்டு வையப்பா' என்று ஏதேதோ சொல்லிப் பார்த்தான். ஆனால் அதனாலெல்லாம் ஞானசம்பந்தனுக்குச் சோர்வு வரவில்லை.

விட்ட முறையைத் தொட்டுப் பிடித்தான். சில திங்கள் உருண்டது. அடுத்த தேர்வில் ஞானசம்பந்தன் வெற்றியும் பெற்றான். கல்லூரியில் நடந்த தேர்வைப் போல் அவன் வாழ்க்கையிலும் தேர்வு எழுதினான்.

அமுதவல்லி ஆடிப்பாடிடும் சின்னப் பெண்ணா இருந்து சிலை வடிவம் பெற்று, ஞானசம்பந்தனுடன் சிரித்து மகிழ்ந்து மங்கை ஆனபின் மசக்கை நோயும் உற்றாள்! அடிவயிற்றின் அளவு அன்றாடம் வளருவதுபோல் ஆயிற்று!

வயிற்றின் பாரம் அமுதவல்லிக்கு மிகுந்தது. அருணாசலத்தின் அரிப்பு ஞானசம்பந்தனுக்கு வளர்ந்தது. கல்லூரியின் விடுமுறைகளும் நெருங்கியது.

தொடரும்

வெண்பாப் போட்டி

13. தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

★ தென்னகத்து வஞ்சகரை; செந்தமிழின் பற்றலரை
தன்னல வாழ்வினிற் சார்ந்தோரை—சன்னதியில்
சேர்ந்தபணம் தின்போரை இந்தி திணிப்போரை
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—ந. சின்னையா, அனுமந்தன்பட்டி.

ஏர்பூட்டி ஆழஉழு, ஏற்ற உரமிட்டு
நீர்பாய்ச்சு, நன்ருய் நிலத்தையும்—சீர்படுத்து,
கார்காலம் வந்தவுடன் கண்டிப்பாய் நல்விதையைத்
தோந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

வேத புராணங்கள் வாழ்வின் நலத்திற்கு
ஆதாரம் என்பர் அறிவில்லார்—மாதேகேள்
ஆர்ந்த திருக்குறளில ஒன்றுக் கவைநிகரோ
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—குகன்குருசாமி, கமுதி.

நல்லறிஞர் பல்லோரும் நாடுமொழி காத்தற்கு
வல்லபல் ''எண்ணம்'' வழங்குகிருர்—நல்லவனே!
கூர்த்த மதிகொண்டு கூறும் அவர்கருத்தைத்
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—தாம்பரக்கிழான், சென்னை.

மஞ்சத்தில் மாளிகையில் வஞ்சித்து நீயிருக்க
வஞ்சமிலார் கஞ்சியின்றி வாடுகின்ருர்—எஞ்ஞான்றும்
பாராமல் பாவியர்கள் வாழ்வதேன்? உன்நிலையைத்
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—நம்பிராமாநுஜம், நெல்லை.

எல்லா வளங்களும் இங்கிருக்க நாமெதற்குப்
பொல்லா வடவர்தாள் போற்றுவது?—நல்லாட்சி
நேர்ந்தால் பிரிவினையே நேரும்! தமிழ்நாடே
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—சோ. கண்ணப்பன், பேரூர்.

கண்டாலும் கேட்டாலும் கண்கலங்கி நிற்குமென்
பண்புள்ள காதலியே பெற்ருேரின்—கண்டிப்பால்
சோர்ந்தாலும் உன்னைவிட்டு நான்பிரியேன் என்பதனைத்
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—ஓ. வி. சிவலிங்கம், பொன்னேரி.

வஞ்சித்தார் காங்கிரசார்; வாழ்விழந்தோம்; வீணுனேம்
எஞ்ஞான்றும் உய்வில்லை; ஈதுண்மை—செந்தமிழா
நேர்ந்த கதியெண்ணி நின்னினத்தார் வாழ்வகையைத்
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—தெ. சு. மதியரசு, தென்கலம்.

ஒற்றுமைதான் கூறுவோர் ஊராள வந்தும்நாம்
உற்றதுயர் நீங்கிற்ருே ஓதுவாய்—நற்றமிழா
சேர்ந்தினியும் வாழ்வா திராவிடத்தின் மீட்பாநீ
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—ந. ஜாபர், சித்தயங்கோட்டை.

கன்னித் தமிழிருக்கக் காட்டுமொழி இந்திக்குத்
தென்னகத்தில் செல்வாக்குத் தேடுகிருர்—இன்னும்நீ
சோர்ந்திருந்தால் சீரழிவாய் சூரப் புலியேறே!
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—சி. சிவராமலிங்கம், சென்னை-1.

இந்தியினை ஆட்சிமொழி என்றேநீ கொண்டுவந்தால்
செந்தமிழர் கானகத்துச் செந்தீயாய்—கொந்தளிப்பார்!
ஆர்ந்தெழும் டில்லி அரசே மதிகொண்டு
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—கும்பகோணத்தான், வசந்தபுரம்.

மன்னு தமிழ்நாடே மாமறவர் வாழ்நாடே
இன்னு முறங்குதியோ ஏன்றயக்கம்—எண்ணிப்பார்
பாரினிலே நீயேன் பனியாவுக் கேபணிந்தாய்
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—த. ப. இரத்தினம், முதுகுளத்தூர்.

மன்றம் முரசொலியும் முல்லையொடு முத்தாரம்
தென்றல் தனியரசும் தேன்பாய்ச்சும்!—நன்னெஞ்சே
ஏற்றமுறத் தென்னகத்தின் ஏடுகளைக் கண்கொண்டே
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—கு. சீத்தாராமன், பனப்பாக்கம்.

காட்டியபல் மேற்பூச்சுக் கண்கவர் மெய்மினுக்கு
ஒட்டியநீள் கார்குழ லொண்டொடியாள்—நட்டுவெளிச்
சீர்காட்டிச் செத்துகிருள் தென்னகத்தை செந்தமிழா
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—உஸ்மான் அலி, கடையநல்லூர்.

இந்திமொழி ஆட்சிக்கே ஏற்ற மொழியென்று
சொந்த மொழிதன்னைச் சுட்டெரிக்கும்—செந்தமிழா!
கூர்மதியும் குன்ருமல் கூற்றுவனுய் ஆகாமல்
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—வெ. வேங்கடசாமி, பாலையம்பட்டி.

நாடுமொழி கல்விசெல்வம், நாகரிகம், நற்கலைகள்,
கோடுயராய் வெற்றியுற கொள்கையுடன்—பாடுபடும்
பேரறிஞர் எங்களண்ணு பேச்சதனைத் தென்னகமே!
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—சி. தணலன், தச்சம்பத்து.

சிற்றுளிக்குக் கைப்பிடியாய் சேர்ந்த மரம்,மரத்தை
சிற்றுளியோ டொன்றி சிதைப்பதுபோல்!—நற்றமிழா!
தேர்ந்தெடுத்த மந்திரிகள் தென்னுட்டைக் கொல்வதைநீ
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

— ஐ. முகம்மது அலி செங்கற்பட்டு.

இந்தியே வேண்டாம் இனிமைத் தமிழ்நாட்டில்;
வந்தால் கெடுமென்ற வாய்மொழி—செந்தமிழா!
பேராற்றில் ஊற்றிய பாலெனப் போனதேன்?
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—அறவீரன், மலைப்பட்டு.

சாவாப் புகழ்மணக்கும் தாயகத்துப் பூங்காவில்
கூவத் தமிழாம் குயிலிருக்க—நாவெறுக்கும்
'ஆரியத்துக் கோட்டான்' அலறல் எதற்கென்று
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—கி. செந்தாமரை, கரையாம்பாளையம்.

வாழ்ந்தாயே அந்நாளில் வையத்தில்; செந்தமிழா!
தாழ்ந்தாயே இன்று; தருக்கரடி—வீழ்ந்தாயே!
தீர்ந்தோய்ந்தி டாதே; திருப்பு, வரலாற்றைத்
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—மா. சுப்பையயா; நாரைக்கிணறு.

★ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு ''தென்றல்'' சந்தா.

தயாராகிறது!
முல்லை
சிறப்பு மலர்
விலை ரூ. 1.

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.
PRO:- வெ. சங்குபிள்ளை, 11 5, திண்டுக்கல்ரோடு, மதுரை

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணுசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு